

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.229/2015

தேதி.18.9.2015

# இலங்கைக்கு எதிராக ஐ.நா மன்றத்தில் தீர்மானம் கொண்டுவரக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி

# 29 ஆம் தேதி ஆர்ப்பாட்டம்

## ச.ம.க.தலைவர் ஆர் சரத்குமார் எம்.எல்.ஏ அறிவிப்பு

ஐ.நா. சபையில், ஐ.நா மனித உரிமை ஆணையத் தலைவர் சையத் ராக் அல் உசைன் அவர்கள் தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், கொடும் பாதகச்செயல்கள், மனித உரிமை மீறல்கள் என இலங்கை அரசு புரிந்துள்ள அனைத்து சர்வதேச சட்ட விரோத செயல்களையும் தனது அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார். மேலும் இக்குற்றங்களை விசாரிக்க இலங்கையில் போதுமான சட்டங்களே இல்லை. எனவே, ஐ.நா மன்றம் ஒரு சர்வதேச பொது விசாரணை அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அமெரிக்கா, இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் கொண்டுவர இருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க, மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்த இலங்கை இன வெறியர்களுக்கு தக்க தண்டனை கிடைக்க, இலங்கை போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை அமைப்பை ஐ.நா.சபையில் அமைத்திட மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. எனவே

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மத்திய அரசு அமெரிக்கா கொண்டுவர இருக்கிற தீர்மானத்தை எதிர்க்க வேண்டும்

## 29 ஆம் தேதி ஆர்ப்பாட்டம்

மனித உரிமை மீறல் குற்றம்புரிந்த இலங்கை அரசு. தனக்குத் தானே நீதி விசாரணை நடத்திக்கொள்ள முடியாது அது நேர்மையாகவும் இருக்காது. எனவே சர்வதேச விசாரணை தேவை என்று, ஐ.நா. மனித உரிமை ஆணையர் தெரிவித்துள்ளதை இந்தியா வரவேற்று, இதே கருத்தை வலியுறுத்துமாறு ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் ஆதரவும் திரட்ட வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி 29.9.2015 அன்று காலை 11 மணிக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். சமத்துவ மக்கள் கட்சியின் தொண்டர்களோடு, பொதுமக்களும், இளைஞர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு நம் சகோதரர்களான ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைத்திட போராட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,வணக்கம்,

உழைப்பவரே உயர்ந்தவர்,

என்றும் அன்புடன்,



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ,

தலைவர்